கவிச்சித்தரின்

# தளிர்



க. பொ. இளம்வழுதி



## இவர்......

புதுவை மாநிலம் மண்ணாடிப்பட்டு கொம்யூன் கலிதீர்த்தாள் குப்பத்தில் பொன்னுசாமி-தனபாக்கியம் இணையரின் இளைய மகனாக 8.1.1936இல் பிறந்தார். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போதே எழுதத் தொடங்கினார். இவருடைய முதல் படைப்பு 1954-இல் புதுவை முரசு இதழிலும், முதல் கவிதை 1955-இல் சுரதாவின் காவியத்திலும் வெளிவந்துள்ளன. பல இதழ் களில் இவருடைய கவிதைகள் வெளிவந்துள்ளன. கவியரசு கண்ணதாசனின் தென்றலும், கவிதைக் காவலர் தெசிணியின் கவிதையும் இவரை உருவாக்கிய முதன்மையான இதழ்கள்.

இவருடைய மூன்று கவிதை நூல்கள் தமிழக அரசின் பரிசையும், புதுவை அரசின் பரிசையும் பெற்றுள்ளன. பதினாறு நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

தென்னார்க்காடு மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவராகவும், தெ.ஆ. மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்ற பொதுச் செயலாளராகவும் இருந்து செயல் பட்டுள்ளார். தற்போது கடலூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் தலைவராக உள்ள இவர் பெயரில் தொடங்கப்பட்டுள்ள அறக்கட்டளை தமிழறிஞர்களுக்கு விருதும், மாணவர்களுக்கு பரிசும் வழங்கி தமிழ்ப் பணியாற்றி வருகிறது.

கவிச்சித்தரின்

# தவிர்

## க.பொ. இளம்வழுதி

பரிதி பதிப்பகம்
6. ஏ.எல்.சி .வணிக வளாகம்,
பாரதி வீதி, கடலூர்-607 001.
☎ *04142-333221.*

| | | |
|---|---|---|
| நூல் | : | *கவிச்சித்தரின்* தளிர் |
| ஆசிரியர் | : | க.பொ. இளம்வழுதி |
| பொருள் | : | சிறுவர் பாடல்கள் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு : டிசம்பர் 2001. |
| உரிமை | : | © ஆசிரியருக்கு |
| தாள் | : | 11.6.கி.கி. மேப்லித்தோ |
| எழுத்து | : | 12. புள்ளி. |
| அளவு | : | 12.5 x 18.5.செ.மீ கிரெளன் |
| பக்கம் | : | VI + 90 = 96 |

விலை : உரு *25.00*

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | பரிதி பதிப்பகம்,<br>6. ஏ.எல்.சி. வணிக வளாகம்<br>பாரதி வீதி-கடலூர்-607001.<br>☎04142-333221. |
| ஒளியச்சு | : | திரையன் கணினியகம்,<br>6. ஏ.எல்.சி. வணிக வளாகம்<br>பாரதி வீதி-கடலூர்-607001. |
| முகப்பு | : | பா. இராவணன், கடலூர்-1. |
| அச்சிட்டோர் | : | லாயல் பிரிண்டர்ஸ், சென்னை-5. |



# பிள்ளைகளே கேளுங்கள்!



பிஞ்சு நெஞ்சங்களுக்காகப் படைக்கப் பட்டதே இந்த நூல். உங்களுக்கு அறிமுகமான எளிய சொற்களும், வடிவங்களும் மட்டுமே ஆளப்பட்டுள்ளன. விதிவிலக்காக ஒன்றிரண்டு இடம்பெற்றிருக்கலாம். அதனால் என்ன? உலகையே உள்ளரங்கத்திற்குக் கொண்டு வந்துள்ள அறிவியல் கண்டுபிடிப்புகளின் தாக்கம், உங்களை வயதுக்கு மீறிய அறிவாளிகளாகப் பட்டை தீட்டியிருக்கிறதே!

உங்கள் வயதுக்காரர் ஐம்பதாண்டுகளுக்கு முன் உங்கள் அளவு உலகை அறிந்து வைத்திருக்கவில்லை. புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. எவ்வளவு சொற்களை உங்கள் நினைவுக் களஞ்சியத்தில் சேமித்து வைத்திருக்கிறீர்கள்! உங்கள் கணினி மூளையில் எவ்வளவு செய்திகள் சேமிப்பாக உள்ளன! மற்றவர்கள் எப்படியோ, நான் உங்கள் அறிவுத் திறமையில் அதிக நம்பிக்கை வைத்துள்ளேன்.

சிறுவர் நூலென்றால் அதை நீங்கள் மட்டுமே படிக்க வேண்டுமென்பதில்லை. உங்கள் வீட்டுப் பெரியவர்களும் படிக்கலாம்; படித்து, உங்களைவிடச் சிறியவர்களுக்குக் கூறலாம். உங்களுக்கு ஏதேனும் ஐயம் ஏற்பட்டால், அவர்கள்தாமே தீர்த்து வைக்க வேண்டும்?

முற்றிலும் வேற்றான ஆங்கிலத்தை, இன்னும் சிறு வயதிலேயே நீங்கள் கற்றுக் கொண்டவர்கள் இல்லையா? தமிழில், உங்கள் தாய் தாலாட்டுப் பாடிய மொழியில், ஒன்றிரண்டு உங்களுக்குப் புதியதாய்த் தோன்றினால், அதற்காக மயங்கி நிற்காதீர்கள். உங்கள் பெற்றோரிடமோ, அண்ணன்,

அக்காளிடமோ கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். புதியதாகச் சில சொற்களைக் கற்றுக் கொண்ட பெருமை உங்களுக்குக் கிடைக்கும். உங்கள் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க வேண்டியது வீட்டுப் பெரியவர்களின் கடமை.

குழந்தைகளே! நீங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள்! எதையும் எளிதில் புரிந்து கொள்கிறீர்கள், கற்றுக் கொள்கிறீர்கள். ஏன், கற்றுக் கொடுக்கக் கூடச் செய்கிறீர்கள். இந்தப் பிஞ்சுப் பாட்டும் உங்களுக்கு நிறையவே பிடிக்கும்.

இதிலுள்ள பாடல்பொருள், முன்னர் வேறு எவரேனும் படைத்தது போலும், படித்தது போலுங் கூட இருக்கலாம். நூலே அப்படி என்று கூறிவிட முடியாது. பெரியாரைப் பற்றியும், பாவாணரைப் பற்றியும் கூட நீங்கள் படிக்கப் போகிறீர்கள். கப்பல் மட்டுமல்ல கணினியும் உண்டு. இவை எல்லாம், காலத்தின் கட்டாயங்கள்.

படியுங்கள். நூலில் இடம்பெற்றுள்ள பாடல் பொருள் குறித்து, மேலும் செய்திகளை உங்கள் பெற்றோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். வளர்ச்சியின் படிக்கட்டுகளில் உங்கள் காலடிகள் பதியட்டும். உங்கள் நெஞ்சில் ஒன்றிரண்டு பாடல் வரிகளாவது பதியுமானால் அதுவே எனக்கு உவகை தரும். புதுப்புது சொற்களைக் கற்று நெஞ்சில் நிறுத்திக் கொண்டால்தான் நீங்களும் பாடல் எழுத முடியும். உங்களுக்குள்ளே திறமை புதைந்து கிடக்கிறது. புதையல் மேலேயே படுத்துக் கொண்டு பொருள் இல்லையே என்று ஏங்குபவர்களைப் போல் நீங்கள் இருந்து விடக்கூடாது.

மற்றவர்களைப் போன்று, மருத்துவர், பொறியாளர் படிப்புதான் பெரியது என்று நீங்களும் அதையே நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். உலகம் போற்றும் விஞ்ஞானியாக வேண்டும், புதிதாக எதையேனும் கண்டு பிடிக்க வேண்டும் என்று எண்ணுங்கள். நாட்டைக் காக்கும் படைத் தளபதியாக ஆக வேண்டும், பேராசிரியர் ஆக வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுங்கள்.

நீங்கள் எழுத்தாளர் ஆகலாம், கவிஞர் ஆகலாம், பேராசிரியர் ஆகலாம். நம் ஊர்க்காரரான அப்துல் கலாமைப் போல் அணுவிஞ்ஞானி ஆகலாம். அதற்கெல்லாம் படித்துப் பழக வேண்டும். விளையாட்டைப் போலவே படிப்பும் தேவைதான்.

இந்நூல் உருவாகப் பலர் ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள். நண்பர்கள் ஊக்கப்படுத்தி உதவியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றி.

8/38- முத்துச் சாலை,
அண்ணா நகர்,
கடலூர்-607 001.

**க.பொ. இளம்வழுதி**

# பதிப்புரை

**துளிர்** என்னும் சொல்லுக்கு இலைமொட்டு; துளிர்த்தல் செய்; செழிப்பாக்கு, மகிழ்வுறு என்றெல்லாம் பொருளுண்டு. மாந்த இனத்தின் மொட்டுக்களாகிய குழந்தைகளை மகிழ்வித்து; அவர்களுடைய எண்ண வளத்தை மேலும் செழிப்பாக்கி, அறிவாற்றலைத் துளிர்விடச் செய்ய உதவும் என்ற நம்பிக்கையாலும், வேட்கையாலும் இந்நூல் படைக்கப்பட்டிருப்பதால், இந்நூலை பதிப்பிடத் துணிந்தோம். இந்நூலைப் பெரியவர்கள் படித்தாலும் இதனை ஒப்புக் கொள்வார்கள்.

குழந்தைகளின் உளப் பாங்குக்கு ஏற்ற பாடல்களும், அவர்களின் அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டும் பாடல்களும் ஓசை நயத்தோடு படைக்கப் பட்டுள்ளன. பாடல்களில் சொற்களின் எளிமையையும், கருத்தில் வலிமையையும் காணலாம்.

குழந்தைகளுக்குப் பரிசாக புத்தகங்களை வழங்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் குழந்தைப் பருவத்திலேயே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தலாம்.

துளிரைத் துளிர்கள் வரவேற்பார்களாக!

கடலூர்-607001.
திசம்பர் 2001.

**பதிப்பகத்தார்**



# நீதான் தம்பி

நல்ல தம்பி நீயே
நன்றாய் கற்கின் றாயே!
செல்லத் தம்பி நீயே
சுருக்காய் எழுகின் றாயே!

முத்தாய் எழுதும் தம்பி!
முரண்டு செய்யாத் தம்பி!
புத்த கத்தை நன்றாய்
போற்றிக் காக்கும் தம்பி!

சோற்றை இறைக்க மாட்டாய்
சொல்லை மீற மாட்டாய்
தூற்றிப் பேச மாட்டாய்
தொல்லைக் கொடுக்க மாட்டாய்!

நீதான் கெட்டிக் காரன்
நிழலுக் கஞ்சா வீரன்
நீதான் எதிலும் சுட்டி
நிறையும் பரிசால் பெட்டி!

# பாடு பாப்பா



பாப்பா பாட்டுப் பாடு - மீசை
பாரதி போல் பாடு!
பூப்போல் உதடு திறந்தே - உனை
புகழ்ந்து பேசப் பாடு.

அம்மா சொன்ன பாட்டு - அதை
அழகாய் பாடிக் காட்டு!
கும்மா ளம்நீ போட்டு - கைக்
கொட்டிப் பாடிக் காட்டு!

நிலவு பாட்டுப் பாடு - நன்கு
நினைவு படுத்திப் பாடு
மலரின் அழகைப் பாடு - நல்ல
மனிதர் பெருமை பாடு!

பேசுந் தமிழைப் பாடு - நாட்டின்
பெருமை தன்னைப் பாடு
ஏசு காந்தி புத்தர் - சொன்ன
இரக்கம் அன்பைப் பாடு!

பள்ளி தொடங்கும் முன்னே - அங்கு
பாடும் பாட்டைப் பாடு
துள்ளி ஓட வேண்டாம் - பாப்பா
தொடையைத் தட்டிப் பாடு!



# என்ன செய்வாய் . . ?

காலையில் எழுவேன்
கதிரைத் தொழுவேன்.

பாடம் படிப்பேன்
பணிகள் முடிப்பேன்.

உண்டு உடுப்பேன்
ஒழுங்காய் நடப்பேன்.

புத்தகம் சுமந்து
போவேன் பள்ளி.

ஓதும் பாடம்
உற்றுக் கேட்பேன்.

அச்சாய் எழுதி
மெச்சப் படிப்பேன்.

பள்ளி விட்டால்
துள்ளி வருவேன்.

மாலை முழுவதும்
மகிழ்வாய் ஆடி

இரவில் பாடம்
எழுதிப் படிப்பேன்.

# நல்லப் பிள்ளை



அம்மா கூட கடைக்குப் போக
அடம்பிடிக்க மாட்டேன் - அழுது
அடம்பிடிக்க மாட்டேன்
சும்மா எதையும் சுற்றிக் காட்டச்
சொல்லியழ மாட்டேன் - பிடித்துத்
தள்ளியழ மாட்டேன்.

அப்பா வந்தால் ஏறி மிதித்து
அழுக்குப் பண்ண மாட்டேன் - உடையை
இழுத்து ஓட மாட்டேன்
இப்போ எனக்கு வேண்டுமென்றே
எதையும் எடுக்க மாட்டேன் - பையில்
இருந்து எடுக்க மாட்டேன்.

தம்பி கையில் உள்ளதை நான்
தட்டிப் பறிக்க மாட்டேன் - எதையும்
தள்ளி உடைக்க மாட்டேன்
தும்பி போலே வீட்டைச் சுற்றித்
தொல்லை கொடுக்க மாட்டேன் - விழுந்து
பல்லை உடைக்க மாட்டேன்.

# ஒருமைப்பாடு



கருப்பாய் இருக்கும் கண்ணன்
இருப்பான் என்பால் அன்பாய்.

சிவப்பாய் இருக்கும் செந்தில்
உவப்பாய் ஆட அழைப்பான்.

நெட்டை யான நெல்சன்
ரொட்டித் துண்டு கொடுப்பான்.

குட்டி அப்துல் தானே
கூட்டிப் போவான் பள்ளி!

அப்துல் அலெக்சு ஆழ்வார்
ஒப்பாய்ப் பேசிப் போவார்.

சேர்ந்தே பள்ளி செல்வோம்
சேர்ந்தே குந்தி உண்போம்.

சேர்ந்தே மகிழ்வோம் ஆடி
சேர்ந்தே இசைப்போம் கூடி.

நிறத்தால் குறையே இல்லை
திறந்தான் எதற்கும் எல்லை.

எங்கள் நட்பு நெஞ்சிலே
எங்கும் அன்பு பிஞ்சிலே!

# நல்ல பழக்கம்



வீட்டின் முன்னே வெளியார் நின்றால்
விரைந்தே சென்று கேளு!
கேட்ட செய்தி தன்னை வந்து
அம்மா காதில் சொல்லு.

அப்பா நண்பர் தேடி வந்தால்
அழைத்து அமரச் சொல்லு
தப்பா தவர்க்குத் தலையைத் தாழ்த்தி
தமிழ்வ ணக்கம் சொல்லு.

பெரிய வர்கள் பேசும் போது
பின்னால் நிற்க வேண்டாம்
தெரியு மென்றே காட்டிப் பேசி
திட்டு வாங்க வேண்டாம்.

உன்னைப் பற்றிக் கேட்டால் மட்டில்
உரிய பதிலைக் கூறு
அன்பாய்ப் பரிசு அளிக்க வந்தால்
அதற்கு நன்றி கூறு.

# பேய்கள் இல்லையடி பாப்பா



நாய்கள் உண்டு வீட்டிலே
நரிகள் உண்டு காட்டிலே
பேய்கள் ஏது நாட்டிலே
பேச்சில் பொய்யாய் வாழுதே!

இருட்டு உண்டு எங்குமே
எழுந்த நிலவில் மங்குமே
குருட்டுக் கதையின் பேய்களே
கோழை நெஞ்சில் தங்குமே!

அச்சம் என்னும் பேய்களே
உச்சி மரத்தில் வாழ்ந்தன
அச்சம் போன வழியிலே
அவையும் ஓடிப் போயின!

கெட்ட எண்ணம் செய்கையின்
கேட்டைச் சுட்டிக் காட்டிடக்
கட்டி விட்ட கதைகளே
கால்கள் இல்லா பேய்களாம்!



# கேளு தம்பி கேளு!

படிக்க வேண்டும் நன்றாக!
பழக வேண்டும் ஒன்றாக!
பிடிக்க வேண்டும் முதலிடத்தை
பெருக்க வேண்டும் உன்திறத்தை!

பாடம் நடத்தும் நேரத்தில்
பக்கம் அக்கம் பார்க்காதே!
ஆட விடுத்த நேரத்தில்
அடித்துப் பிடித்துத் தள்ளாதே!

ஆசான் வகுப்பில் சொன்னபடி
அமர்ந்தே பாடம் செய்துமுடி!
பாசாங் கென்றே எண்ணும்படி
படித்தால் சிரிப்பார் வெட்கும்படி!

குண்டு குண்டாய் எழுதிப்பார்
கொடுத்த கணக்கை பழகிப்பார்!
வண்டைப் போலே சுறுசுறுப்பாய்
வாங்கும் நூலைப் படித்துப்பார்!

விடியும் பொழுதே எழுந்திடுவாய்
விரும்பிப் பாடம் படித்திடுவாய்
படிக்கா திருந்தால் பலனேது
பரிசும் புகழும் கிடைக்காது!

# வெற்றி உனதே!



வெற்றி உன்றன் பக்கத்தில்
விலக வேண்டாம் வெட்கத்தில்
சுற்றி நிற்போர் கூப்பாடு
சுறுசுறுப் பேற்றும் ஏற்பாடு!

முயற்சி குன்றக் கூடாது
மூத்தோர் சொல்லை மீறாது
பயிற்சி செய்நீ வாராது
பரிசு எங்கும் போகாது.

உழைப்பிற்(கு) எங்கும் பலனுண்டு
உதவும் நல்லார் துணையுண்டு
அழைத்தால் வெற்றி வருமென்று
அயர்ந்தே இருப்போன் பெருமண்டு!

பயிற்சி யால்தான் பயஸ்வென்றார்
பந்த யத்தில் உஷாவென்றார்
உயர்வு உழைத்தால் தேடாது
ஒதுங்கிப் பதுங்க ஓடாது.

# எல்லோரும் நல்லவரே



பசிக்கும் நேரம் தானறிந்து
புசிக்கத் தருவாள் எமதன்னை.

படிப்பில் ஐயம் தனைக்கேட்டால்
அடிக்கா(து) உரைப்பார் எம்தந்தை!

தடுக்கி விழுந்தால் என்பாட்டி
வெடுக்கெனத் தாவித் தூக்கிடுவாள்.

என்னை அடிக்கக் கைஓங்கின்
முன்னால் தடுப்பார் எம்தாத்தா!

ஆடத் துணைக்கு வாவென்றால்
கூட வருவான் என்னண்ணன்.

இதழில் உள்ள கதைகேட்டால்
இதமாய்ச் சொல்வாள் எம்அக்காள்.

தாட்பூட் ஆட்டம் ஆடுதற்கு
கூட்டாம் தம்பி தங்கைகளே!

எல்லா ருக்கும் நல்லவனாய்
சொல்லால் செயலால் நானிருப்பேன்.

# பல் விளக்கு



பல்விளக்கு பல்விளக்கு
பளபளக்கப் பல்விளக்கு.
முல்லை போல பல்விளங்க
முழங்கை ஆட்டிப் பல்விளக்கு.

பசை கரைய பல்விளக்கு
பக்கம் மாற்றிப் பல்விளக்கு
அசைத்து அசைத்துப் பல்விளக்கு
அரும்பு போன்ற பல்விளக்கு

இடுக்கில் பதுங்கும் கிருமிகள்
இல்லா தொழிய பல்விளக்கு
படுக்கும் முன்னும் பல்விளக்கு
பழுது நீக்கப் பல்விளக்கு

அடுக்காய் உள்ள பல்விளக்கு
அழகாய் சிரிக்கப் பல்விளக்கு
நடுக்க மின்றிப் பல்விளக்கு
நாற்றம் போகப் பல்விளக்கு.

# வேண்டும்! வேண்டும்!



உலகம் உன்னால் பயன்பெற வேண்டும்
உலகம் உன்னைத் தொழுதெழ வேண்டும்
உலக மாந்தர் உவந்திட வேண்டும்
உலகம் வாழ உதவிட வேண்டும்

உன்னால் அறிவு ஒளிவிட வேண்டும்
உன்னால் இழிவு அழிவுற வேண்டும்
உன்னால் இனமே உயிர்த்தெழ வேண்டும்
உன்னால் தமிழும் உயர்ந்திட வேண்டும்

உன்னுளம் நாளும் உரம்பெற வேண்டும்
உன்திறம் எங்கும் நலம்பெற வேண்டும்
உன்மதி விண்போல் உயர்ந்திட வேண்டும்
உன்கரம் ஓயா துழைத்திட வேண்டும்

உன்போல் ஒருவரும் இலையென வேண்டும்
உன்பேர் எங்கும் இசைபெற வேண்டும்
உன்னூல் உலகை அசைத்திட வேண்டும்
உன்பொருள்பயனால் நலந்தர வேண்டும்

# சிந்தனைக்கு . . .

**சிந்தைக்கே தீனிநீ போடு - தம்பி**
**செயலாக்கும் மனத்தே போடு! . . .**

**நந்திநிகர் சோம்பலைநீ தள்ளு - உன்னை**
**நத்திவரும் புன்மைகளை எள்ளு!**
**தந்திரத்தில் தீமைவரும் கொல்லு - உன்றன்**
**தாய்,தந்தை காட்டுவழிச் செல்லு.**

**கற்றார்தம் சொற்கேட்டல் நன்று - நன்றி**
**காட்டுவதில் சுணங்காதே; ஒன்று !**
**கற்றநெறி நின்றால்தான் குன்று - நாளும்**
**கடிதுழைக்கக் கற்றுக்கொள் சென்று!**

**தேர்ந்தெடுத்த நூற்களையே கற்பாய் - சான்றோர்**
**தீட்டியுள நெறிமுறையில் நிற்பாய்!**
**கூர்ந்தறியும் வித்தைபல கற்பாய் - கூட்டம்**
**கொண்டாட நீயுயர்வாய் வெற்பாய்!**

**தோள்பற்றி நடப்பாரைத் தம்பி - தூக்கும்**
**துணையென்று கொள்ளதே நம்பி!**
**கோள்சுற்றிக் காட்டாது ஊரை - அன்னார்**
**கூரையிற்று விழ்ந்திட்ட வாரை!**

# மாணவர்க்கு



காலையில்நீ துயிலெழுதல் நன்று - உடல்
கை,கால்கள் முகம்கழுவிக் கொண்டு
நூலைஎடு பயிலுவதற் கென்று - படி
நூற்றுக்கு நூறுபெறு வென்று!

பள்ளி முதல் பல்கலைகள் வரையில் - கல்விப்
பயின்றிடுவாய் தேர்ந்தவழி முறையில்
புள்ளி போட மட்டுமிது இல்லை - தேர்ந்த
புலமைக்கும் இல்லையடா எல்லை.

குண்டுகுண் டாகவேநீ எழுது - யாரும்
குறைகூற மாட்டாரப் பொழுது!
கண்டவுடன் ஆசானைத் தொழுது - கற்கக்
கல்விநலன் விட்டிடும்பார் விழுது.

எல்லார்க்கும் ஆனதிந்த கருத்து - இதை
ஏற்றுன்றன் நெஞ்சகத்தில் நிறுத்து.
இல்லையிவை எமக்கென்று நினைத்து - எவர்
இருந்தாலும் இழிவுவரும் கிளைத்து!

# கற்பதே வேலை!



எல்லாம் நல்லார் என்றே - நாளும்
எண்ணிப் பழக வேண்டும்
நல்லார் என்றே உன்னை - உற்ற
நண்பர் சொல்லத் தூண்டும்.

உதவ வேண்டும் யார்க்கும் - அது
உனக்கும் நன்மை சேர்க்கும்
கதவின் சந்தில் போகும் - புகை
கணக்கில் இன்னல் போக்கும்.

பழித்துப் பேசல் தீது - என்றே
பழகுவோர்க்கும் ஓது
இழித்துப் பேசும் போது - எவர்
இனிய தென்பார் ஓது!

படிப்பில் ஆர்வம் காட்டு - கல்விக்
கல்லில் அறிவைத் தீட்டு
கடிக்கும் கொசுவைப் போலே - சோம்பல்
கண்டால் விரட்டி ஓட்டு.

கற்ப துன்றன் வேலை - கல்வி
கை கொடுக்கும் நாளை!
கற்ற நெஞ்சே சோலை - அங்கே
கவிதை பூக்கும் காலை!

# அம்மா பொண்ணே!



அம்மா பொண்ணே கேட்டுக்கோ
அழகு முகத்தைக் கழுவிக்கோ
பொட்டும் பூவும் வச்சுக்கோ
புதிய ஆடை உடுத்திக்கோ
துட்டு கொஞ்சம் வாங்கிக்கோ
துணைக்கு அண்ணா கூட்டிக்கோ
எட்டி நடையைப் போட்டுக்கோ
இடது பக்கம் ஓரம்போ
இரையும் கடலின் கரையிலே
இருந்து காற்று வாங்கலாம்
நண்டு மேயும் பார்க்கலாம்
நின்று கிளிஞ்சல் சேர்க்கலாம்
கொண்டு வந்து கோர்த்ததை
குடிலை அழகு படுத்தலாம்
கண்ட வர்கள் கேட்கவே
கைத் திறத்தைக் காட்டலாம்!



# சாலை விதி

நடந்து வெளியில் சென்று வந்தால்
நன்றாய்க் காலைக் கழுவு
உடலில் நுழையும் கிருமி கட்கு
உனது காலே கதவு.

சிதைத்துத் தேய்த்து நடந்து சென்றால்
சிராய்த்து ரத்தம் வடியும்
உதைத்துத் தெருவின் மண்ணைத் தூற்றின்
உடலில் அழுக்கு படியும்.

வழியில் நாய்கள் படுத்தி ருந்தால்
வளைந்து விலகிச் செல்லு
கழியைக் கல்லைத் தூக்கிப் போட்டால்
கடிக்கும் தெரிந்து கொள்ளு.

இடது பக்க ஓர மாக
எங்கும் நடக்க வேண்டும்
கடமை விதியை மீறி டாமல்
கட்டிக் காக்க வேண்டும்.

சாலை தன்னைக் கடக்கும் முன்னே
சற்று நின்று பாரு
வேளை யோடு மாலை நேரம்
வீடு வந்து சேரு.

# காலையில் எழு

விடிந்தது பொழுது கண்ணே!
வெடுக்கென எழுந்து பாரு
முடிந்தது வாழ்நாள் ஒன்று
முளைத்திடும் வெளிச்சம் பாரு.

கண்களைக் கசக்கி டாது
கதிர்முகம் எழுந்து பாரு
விண்ணிலே வெளிச்சம் ஏற்றி
விரைந்தெழும் காட்சி பாரு.

வெளிச்சமே வந்த பின்னும்
விழித்தெழா துறங்க லாமா?
குளித்திடும் குருவி காக்கை
குரலிசை எழுந்து கேளு.

கன்றினைக் காட்டிப் பாலை
கறந்திடும் ஓசை கேளு!
வென்றவர் போலே காளை
விறைப்புடன் நடக்கும் பாரு!

இன்னுமா தூக்கம் பாப்பா!
எடுத்திடு நூலை, நாளை
உன்றனைப் புகழ வேண்டும்
உடனெழு படிக்க வேண்டும்.

# திருக்குறள்



சின்னப் புத்தகம் - குறள்
சிறந்த புத்தகம்
என்ன வேண்டுமோ - அது
இருக்கும் புத்தகம்

அறங்கள் இருக்குது - நல்ல
அறிவை வளர்க்குது
திறத்தைக் கொடுக்குது - கற்க
தெளிவு பிறக்குது.

பொருளும் இருக்குது - கற்றால்
புகழும் கொடுக்குது.
இருளை விளக்குது - நெஞ்சில்
ஈரம் சுரக்குது.

இன்பம் இருக்குதாம் - குறளில்
எல்லாம் இருக்குதாம்.
நன்று படிப்பதாம் - படிக்க
நன்மை கிடைக்குதாம்.

# ஔவைப் பாட்டி

ஒற்றை வரியில் செய்யுள்
ஓத நலமாம் செய்யுள்
கற்றுக் கொள்ள ஔவை
கனிவாய் தந்த செய்யுள்.

நல்ல கருத்துச் செய்யுள்
நமக்கே ஏற்றச் செய்யுள்
வெல்ல இனிப்பைப் போலே
விருப்ப மான செய்யுள்.

ஆத்திச் சூடி போன்றே
ஔவை தந்த செய்யுள்
ஏத்திப் பாடிக் கற்க
ஏற்ற கொன்றை வேந்தன்.

நல்வழிச்சொல் வாக்குண்டாம்
நான்கடியே அதற்குண்டாம்
எல்லாருக்கும் பொருளுண்டாம்
எண்ணிக் கற்றால் நலமுண்டாம்!

# பெரியார்



கருப்புச் சட்டைத் தாத்தா - நல்ல
கழகம் கண்ட தாத்தா
நெருப்புப் பேச்சுத் தாத்தா - நம்மின்
நெஞ்சில் வாழும் தாத்தா !

சின்ன வயது குரும்பு - கேட்க
செய்தி எல்லாம் கரும்பு
பொன்னைப் போன்ற மேனி - கொண்ட
புரட்சிக் கார தாத்தா !

அறிவை நம்பச் சொன்னார் - எதையும்
ஆய்ந்தே பார்க்கச் சொன்னார்
நெறியாய் வாழச் சொன்னார் - கீழ்மை
நீக்கத் தெளிவாய்ச் சொன்னார்.

எல்லா ருக்கும் வாய்ப்பு - இங்கே
இருக்க வேண்டும் என்றார்
நல்லா ரென்றே போற்ற - நாட்டில்
நன்மை சேர்த்தே சென்றார்.

வெள்ளித் தாடி பெரியார் - தீமை
வீழ்த்தி நின்ற பெரியார்
கிள்ளி எழுப்பும் பேச்சால் - நாளும்
கிளர்ச்சி செய்த பெரியார்.

# காந்தித் தாத்தா



காந்தித் தாத்தா நல்லவராம்
கருணை நெஞ்சில் உள்ளவராம்
ஏந்தி மக்கள் கொண்டாட
எளிய வாழ்வே வாழ்ந்தவராம்.

கையால் நூலை நூற்பாராம்
கதரே என்றும் உடுப்பாராம்
தையல் இல்லா உடையணிந்தே
தலைவ ராகி உழைத்தாராம்

பொய்யே சொல்ல மாட்டாராம்
பொறாமை கொள்ள மாட்டாராம்
செய்யச் சொல்லும் முன்தானே
செய்து காட்டி நடந்தாராம்.

வெள்ளைக் காரர் ஆட்சிதனை
விரட்டி நாட்டை மீட்டாராம்
பள்ளிப் பிள்ளை எங்களுக்கு
படமாய்ப் பாடம் ஆனாராம்.

# பாவாணர்



தேவ நேயப் பாவாணர்
தேர்ந்த அறிஞர் பாவாணர்
தூவல் என்ற பாவாணர்
தூய தமிழே பாவாணர்.

தமிழின் பெருமை சொன்னாரே
தலைமை அதற்கே என்றாரே
உமியாய் வாழ்ந்தோர் போலன்றி
உரமாய்த் தமிழுக் கானாரே!

தமிழின் வேர்ச்சொல் கண்டாரே
தமிழே உயிராய்க் கொண்டாரே
குமிழாய்ப் போன மாந்தருளே
குன்றாய்த் தோன்ற நின்றாரே!

உலகத் தமிழர் தமையெல்லாம்
ஒன்று சேர்க்க உழைத்தவராம்
உலக மொழியின் தாய்தன்னை
உச்சி ஏற்றி வைத்தவராம்.

# படை நடத்திய பாரத வீரர் சுபாஷ் சந்திர போஸ்



கெட்டிக் காரர் போசு
பட்டாக் கத்தி பாரு!
பட்டாளத்து வீரர்
பாரதத்தின் தீரர்!
அட்டகாசம் செய்தே
ஆண்ட வெள்ளைக் காரர்
கொட்டம் அடக்கி ஓட்ட
குண்டு போட்டுப் பார்த்தார்.

தாடி வைத்த தாகூர்
தன்னைத் தந்த வங்கம்
தேடித் தந்த செல்வம்
தீரர் நம்மின் போசு!
கோடிப் பேருக் குள்ளே
குணத்தில் படிப்பில் எல்லாம்
மாடி போலே ஓங்கி
மாண்பாய் வளர்ந்து வாழ்ந்தார்

இந்தியாவை மீட்க
எண்ணங் கொண்ட போசு
சொந்தப் படையைக் கொண்டு
சுட்டு வென்று வந்தார்
அந்த நேரம் ஜப்பான்
அளித்த உதவி நிற்க
இந்தியாவின் வீரர்
இழந்தார் வெற்றி வாய்ப்பை!

வல்லார் வான ஊர்தி
வழியில் பற்றி வீழ
நல்லார் மாண்ட தாக
நாளான பின் சொன்னார்
இல்லை போசு என்னும்
ஏக்கம் வேண்டாம், சாகா
எல்லைத் தொட்டு விட்டார்
இன்றும் வாழு கின்றார்.



# இயற்கை

கொட்டைக் குள்ளே வண்டிருக்கே
வைத்தது யாரு? - உள்ளே
வைத்தது யாரு?
குட்டைக் குள்ளே நீந்தமீனை
விட்டது யாரு? - அங்கே
வைத்தது யாரு?

பூவுக் கெல்லாம் நிறமெடுத்துப்
பூசிய தாரு? - அழகாய்ப்
பூசிய தாரு?
மாவுக் குள்ளே புழுவை வைத்து
மறைத்தது யாரு - அங்கே
மறைத்தது யாரு?

குழலுக் குள்ளே ஊதும் போது
கூவுவ தாரு? - உள்ளே
கூவுவ தாரு?
சுழலு கின்ற உலகைநின்று
சுற்றுவ தாரு? - இயற்கைச்
சூத்திரம் பாரு.



# மழை

மழையே மழையே வா!வா!
மரத்தைச் செடியை வளர்க்க வா
பழைய குளத்தில் தண்ணீரைப்
பாய்ச்ச நீயும் இறங்கி வா!

தவளை எல்லாம் தத்தித்தத்தி
தாளம் போடும் உன்னால்
கவலை யின்றி ஓடும் நீரில்
கப்பல் விடுவோம் முன்னால்!

குடைகள் எல்லாம் குளிக்கும்மழைக்
கோட்டுங் கூட குளிக்கும்
மடையில் நிற்கும் கொக்கு மட்டில்
மழையில் நனைந்து களிக்கும்

புதுசு புதுசாக வீட்டில்
பூச்சி வந்து மேயும்
குதிரு போன்ற மரமும்
கொட்டு மழையில் சாயும்.

கூரை மேலே மரவட்டைக்
குழந்தை ரயிலு ஓடும்
தாரை தாரை யாய்த் தண்ணீர்
தரையில் விழுந்து கூடும்!



# மாமரம்

எங்கள் வீட்டு மாமரம்
எம்மாம் பெரிய மாமரம்!
உங்க ளுக்கும் காட்டுவேன்
உயர மான மாமரம்!

பறவைக் கூட்டம் சூந்தியே
பாடிக் கூடிக் கூவிடும்
சிறகை விரித்துப் பறந்திடும்
சென்று மீண்டும் வந்திடும்!

கொத்துக் கொத்தாய் மாங்காய்
கோடை நாளில் காய்த்திடும்
தத்தித் தாவும் அணிலதைத்
தனியாய்க் கோதித் தின்றிடும்.

தங்கம் போலே மாம்பழம்
தருவேன் பறித்து உண்ணவே
எங்கள் வீட்டு மாம்பழ
இனிப்பைத் தின்று பாருமே!

# இலையுதிர் காலம்



திருப்ப திக்குப் போனியா?
திருத் தணிக்குப் போனியா?
உருவம் மாறிப் போச்சுதே
உனக்கு என்ன நேர்ந்தது?

காய்ச்சல் ஏதும் வந்ததா?
கட்சி உனது தோற்றதா?
ஆய்ந்து ஓய்ந்து முடிவிலே
ஆண்டி யாகிப் போனியா?

அடிபெ ருத்த ஒதியனே
அழகி ழந்து போனியே
முடிமு ளைத்த பின்னரே
முகத்தில் அழகு தோன்றுமே!

முடி உதிர்ந்த தலையென
மொட்டை யான வேம்பரே
ஒடிக்க மாட்டோம் கிளைகளை
உடனே துளிர்த்து நிழல்கொடும்.

# வாழை

குப்பைக் கூளம் தனைக்கொட்டி
குளித்த அழுக்கு நீர்ப்பாய்ச்சி
எப்படி என்னை வளர்த்தாலும்
இனிக்கும் பழமே நான்தருவேன்.

பந்தி இலையாய் நானிருப்பேன்
படையல் போட நான்வருவேன்
முந்தி விழாவில் நின்றபடி
முகத்தைக் காட்டி வரவேற்பேன்.

மாலை கட்ட நார்தருவேன்
மருந்துக் காக வேர்தருவேன்.
காலை மதியம் இரவுண்ண
கறியும் கூட்டும் நான்தருவேன்.

புல்லாய்ப் பிறந்த எனைநீங்கள்
புகழ்ந்தே மரமென்(று) அழைப்பதனால்
எல்லாம் தந்தேன் நன்றிக்கு
என்போல் நீங்களும் இருந்திடுங்கள்.

# மரம் வளர்ப்போம்

சுற்றுச் சூழல் தனைக்காக்கும்
சூடாம் காற்றின் அனல்போக்கும்
நெற்றுத் தேங்காய் காய்கனிகள்
நிழலைக் கொடுக்கும்
மரம்வளர்ப்போம்!

வீதிக் கழகு மரந்தானே?
வீட்டுக் கழகு செடிதானே?
பாதி காய்ந்த மரப்பொந்து
பறவை உறங்கும் குடில்தானே!

உதவாக் காற்றை உள்வாங்கி
உயிராம் காற்றை நமக்கீந்து
இதமாய்த் தென்றல் வீசிவர
இலையால் உதவும் மரமன்றோ?

கட்டில் பேழை நாற்காலி
கதவு சன்னல் சிறுதூளி
ஒட்டும் பலகை பொம்மைகளும்
உதவும் நண்பன் மரந்தானே!

கன்று ஒன்றை நட்டுப்பார்;
காத்து வளர்ந்து உயர்த்திப்பார்;
என்றும் உனக்குத் துணையாகும்;
இறங்கும் மழைக்குப் படியாகும்.



# நீர்

நீருக் கென்றோர் நிறமில்லை
நிலையாய் ஏதும் சுவையில்லை!
ஊருக் குள்ளே நல்லார்போல்
உதவும் நமக்குத் தண்ணீரே!

தூய நீரே குடித்திட்டால்
தூர நோயை விரட்டிடலாம்
பாயும் நதியில் அழுக்கடைந்தால்
பயிரும் மீனும் பலியாமே!

உலகில் முக்கால் தண்ணீர்தான்
உடலில் அளவும் அதுவேதான்
நிலவில் மட்டும் நீரிருந்தால்
நீயும் நானும் போய்விடலாம்!

ஏரி குளங்கள் இல்லாமல்
ஈரம் மண்ணுள் இருந்திடுமா?
ஊரில் தண்ணீர்ப் பஞ்சத்தை
உண்டு பண்ண வேண்டாமே!

காற்றும் நீரும் கண்ணைப்போல்
காக்க வேண்டும் பெண்ணைப்போல்
போற்றும் பூமி செழிப்படைய
புதிதாய் காடு வளர்த்திடுவோம்!



# தென்னை

என்னைப் பாரு! எண்ணிப் பாரு
தென்னை என்ப தென்றன் பேரு
அன்னை போலே ஆவேன் பாரு
அறுத்தே காய்நீர் குடித்துக் கூறு!

கொடுத்து வளர்வ தாலே நெட்டை
கெடுத்து வாழ்வோர் நெஞ்சம் குட்டை
படுத்துப் பாரு குளிரும் மட்டை
பன்னா டைதான் என்றன் சட்டை!

உரத்தை எனக்குக் கொடுத்துப் பாரு
ஊற்று நீரைப் பாய்ச்சிப் பாரு
மரத்தில் நூறு தொங்கும் பாரு
மகிழ்ந்து விற்றுப் பணத்தைச் சேரு!

தேவை யற்ற தென்ப தொன்று
தேடிப் பார்க்க இல்லை என்று
நாவைச் சப்பிக் கூவிச் சென்று
நட்டுப் பாரு தென்னங் கன்று!

சமைக்கத் தேங்காய் துருவ லாவேன்
சரக்காய்க் காய்ந்து எண்ணெய் ஆவேன்
அழைக்கும் பந்தல் ஓலை யாவேன்
அதனைத் தாங்கும் வாரை யாவேன்!

குடிசைக் கூரைக் கீற்று தந்து
குடிக்க இனிய நீரைத் தந்து
படிக்கத் தோப்பு நிழலைத் தந்து
பயனா கின்றேன் விறகாய் வெந்து!



# காய்கறித் தோட்டம்



தோட்டத்திலே புடலங்காய்
தொங்கும் பாம்பு போலே
கூட்டு வைத்துச் சாப்பிட
வாட்ட மிந்த காய்களே!

சுருக்கி வைத்த குடையென
சுவைக்கும் வெண்டை பாரு!
பருப்புக் குழம்பில் மத்தளம்
பசுமை யான வெண்டையே!

ஊதிவிட்ட பலூன்போல்
ஊதாநிறக் கத்தரிக்காய்
காதில் தொங்கும் ஜிமிக்கிபோல்
காய்த்துச் செடியில் தொங்குது.

சேவல் கொண்டை போன்ற
சிவந்த குண்டு தக்காளி
ஆவ லாகப் பறித்தே
அப்படியே உண்ணலாம்.

# முல்லைப் பூ



காம்பு முளைத்த பொரியாய்
  காணும் முல்லை அரும்பு
கூம்பு வடிவில் மின்னொளி
  கொடுக்கும் விளக்காய்த் தோன்றுதே!

கட்டி வைத்த அரும்பு
  கமகமக்கப் பூக்குது
துட்டுக் கொடுத்து வாங்கினால்
  தொங்கச் சடையும் கேட்குது.

மொட்டு முல்லை தன்னை
  கட்டிச் சரமாய்ப் பார்த்தால்
குட்டிப் பாப்பா பல்போல்
  கொள்ளை அழகாய்த் தோன்றும்.

தந்தம் போன்ற முல்லை
  தலையில் வைத்த பின்னர்
சந்த னத்தின் நிறத்தில்
  சருகாய் மாறிப் போகும்.




கூரை போன்ற மலையிலே
கொட்டும் மழை கூடியே
தாரை தாரை யாகவே
தரைக்குப் பாய்ந்து வருகுது.

மலையில் பெய்த மழையெலாம்
வளையைத் தேடும் பாம்பென
வளைந்து வளைந்து இறங்கியே
வழியை ஆறாய் மாற்றுது.

அம்மா மடியைத் தேடிடும்
அழுத குழந்தை போலவே
அம்மாம் நீரும் திரண்டுமே
அலைந்து கடலில் கூடுமே!

நடக்க உதவும் பாதையே
நல்ல வீதி ஆச்சுது
அடங்கா வெள்ளப் பாதையோ
ஆறாய் ஆகிப் போச்சுது!

ஆற்று நீரே இல்லாது
அருந்த குளிக்க நீரேது?
ஊற்றும் வற்றிப் போனாலே
உணவும் பிறவும் நமக்கேது?



# யானை

கருங்கல் குன்று யானை
காட்டில் பிடித்த யானை
உருவம் கருத்த யானை
உதவி செய்யும் யானை
துருவல் தேங்காய் என்றால்
துதிக்கை நீட்டும் யானை
தெருவில் நடந்து வந்தால்
தின்னப் பழமும் தருவோம்.

அதிர நடக்கும் யானை
அறிவு மிக்க யானை
முதிர்ந்த மரத்தைக் கூட
முட்டிச் சாய்க்கும் யானை
நதியில் குளிக்கும் யானை
நல்ல திந்த யானை
துதிக்கை நீட்டித் தலையில்
தொட்டு வாழ்த்தும் யானை.

சின்னக் கண்ணு யானை
செவிகள் அகன்ற யானை
தென்னை, கரும்பு வெல்லம்
தின்னும் இந்த யானை
தன்னைச் சீண்டு வாரை
தள்ளி மிதிக்கும் யானை
அன்பு காட்டும் நம்மை
துன்பு றுத்தா யானை.

# நாய்க் குட்டி



எங்கள் வீட்டு நாய்க்குட்டி
என்மேல் தாவும் நாய்க்குட்டி
பங்குக் கேட்டு உண்பதற்கே
பக்கம் நிற்கும் வாலாட்டி.

காது மடிந்த நாய்க்குட்டி
கற்றை முடிவால் நாய்க்குட்டி
தீது செய்யா நாய்க்குட்டி
திறமை யான நாய்க்குட்டி.

நக்கிப் பாலைக் குடிக்குமிது
நன்றாய் எலும்பைக் கடிக்குமிது
எக்கிப் பந்தைப் பிடிக்குமிது
இட்ட வேலை முடிக்குதிது.

அயலார் கண்டால் குரைக்கிறது
அண்டி வந்தால் முறைக்கிறது
நயமாய்க் கொஞ்சக் குழைகிறது
நக்கி நக்கிக் குதிக்கிறது.



# புலி

காட்டு விலங்கைக் காண்பதற்கே
 காட்சிச் சாலைப் போய்வந்தேன்
கூட்டில் வண்ணப் பறவைகளும்
குரங்கும் பாம்பும் பார்த்தேனே!

கூண்டில் அடைத்த புலியொன்று
 குறுக்கும் நெடுக்கும் நடந்ததுவே
தாண்டிக் குதிக்கத் தடைகண்டு
 தாவி உறுமி முறைத்ததுவே!

பூனை போலே புலிகளுக்குப்
 புதுசா வேறு நிறமில்லை
பூனை எலியைப் பிடிப்பதுபோல்
 புலியும் மானைப் பிடித்திடுமாம்!

மீசை நீண்ட புலியாலே
 மிரட்டிக் காட்டத் தான்முடியும்
ஆசை யாக பூனையைப்போல்
 அருகே வந்து நிற்காதே!

பாய்ந்தே நம்மைக் கடித்திடுமாம்
 பசுவைக் கூடக் கொன்றிடுமாம்
நாய்போல் பழகாப் புலியாலே
 நன்மை ஏதும் கிடையாதே!

# எறும்பு



சின்னச் சின்ன எறும்பு
சேர்ந்தே செல்லும் எறும்பு
தின்னும் பண்டம் தேடியே
தினமும் அலையும் எறும்பு.

சிவப்பு வண்ண எறும்பு
சீனி விரும்பும் எறும்பு
கவலை இல்லா எறும்பு
கடின உழைப்பு எறும்பு.

இறந்த பூச்சிப் புழுவை
இழுத்துச் செல்லும் எறும்பு
சிறந்த அறிவுக் கூர்மையால்
சேர்த்து வைக்கும் எறும்பு!

முட்டை வைக்கும் எறும்பு
முதுகு நீண்ட எறும்பு
சட்டைக் குள்ளே புகுந்தால்
கொட்டும் செந்தேள் எறும்பு.



# மின்மினி

மின்னல் துண்டு போலே
மினுக்கி பறக்கும் பூச்சி!
சின்னப் பூவைப் போலே
சிறகை விரிக்கும் பூச்சி!

எண்ணெய் இல்லா விளக்கை
ஏந்திப் பறக்கும் பூச்சி
கண்கள் காணா இருட்டில்
காற்று வாங்கும் பூச்சி.

செடியில் மொய்க்கும் பூச்சி
சிரிப்பாய்த் தோன்றும் பூச்சி
பிடியில் சிக்காப் பூச்சி
பிஞ்சுப் பல்போல் பூச்சி!

உன்றன் வாலின் முனையில்
ஒளிரும் வெளிச்ச விந்தை
என்றன் காதில் ஓத
இறங்கி மடிக்கு வாயேன்.



# மயில்

குளிர்ந்த காற்று வீசுது
கொண்டை மயிலும் ஆடுது
தளிரின் பச்சைத் தோகையில்
தங்கக் காசு மின்னுது.

ஊனா எழுத்தைப் போலவே
உருவம் எனக்குத் தோணுது
கூனா போன்றும் இருக்குது
கொண்டைக் குஞ்சம் குலுங்குது.

தோகை பட்டுப் புடவைபோல்
தொங்க விட்டுக் காட்டுது
ஈகை நெஞ்ச மிருப்பதால்
இறகைக் கூட உதிர்க்குது.

நம்மை நடுங்க வைத்திடும்
நல்ல பாம்பும் அஞ்சிடும்
இம்மாம் பெரிய பறவைதான்
இங்கு வேறு இல்லையே!

விசிறி போலே தோகையை
விரித்தே அழகைக் காட்டுது
பசிக்குப் பூச்சிப் புழுக்களை
பாய்ந்தே கொத்தித் தின்னுது.

# காலைக் கச்சேரி



எந்த மரத்தில் இருந்துகுயில்
இசைத்துக் காட்டுது - மனத்தை
அசைத்துக் காட்டுது?
சொந்தக் குரலில் இசைத்துகுயில்
சொக்க வைக்குது - மறந்து
நிற்க வைக்குது.

கீச்சுக் கீச்சு என்றுகிளி
கிளையில் தாவுது - பறக்கும்
நிலையில் கூவுது
பேச்சுப் பேச்சு என்றுகிளி
பேசிப் பார்க்குது - யாரை
ஏசித் தீர்க்குது?

கூச்ச லிட்டு மைனாமட்டில்
கொத்திப் பொறுக்குது - ஏனோ
கத்திப் பறக்குது
மூச்சு முட்ட சண்டையிட்டு
மோதிப் புரளுது - ஏதோ
ஓதிப் பிரியுது.

குளியல் போட்டு காக்கையெலாம்
கூச்சல் போடுது - மூக்கை
தேச்சு ஓடுது
வெளியில் பறந்து திரிவதற்கு
விரைந்து எழுகுது - காக்கை
கூடிப் பழகுது.

அணில்கள் கிளையில் தாவித்தாவி
ஆட்டம் போடுது - ஓடி
அழகுக் காட்டுது
துணிது வைத்தல் போலேவாலைத்
தூக்கி அடிக்குது - கத்திக்
துள்ளிக் குதிக்குது.



# கன்றுக் குட்டி



கருப்பு வெள்ளை நிறத்திலே
கன்றுக் குட்டிப் பிறந்தது - அது
காலைப் பரப்பி நின்றது.
விரும்பும் கன்றுக் குட்டியை
வெள்ளைப் பசுவும் நக்குது - நமை
விரட்டத் திரும்பிப் பார்க்குது.

பத்து நாட்கள் பறந்ததும்
பாய்ந்து கன்று துள்ளுது - பசுவின்
பக்கம் நின்று கொள்ளுது.
முத்தம் கொடுத்தல் போலவே
முகர்ந்து தாயை முட்டுது - கொஞ்சம்
நகர்ந்து வாலை நக்குது.

கன்றுக் கென்ற பாலைநாம்
கறந்து குடித்த போதிலும் - அதை
மறந்து குடித்த போதிலும்
நன்றி காட்டி அமைதியாய்
நின்று சுரந்து கொடுக்குது - அது
கன்றைக் கொடுக்கப் பழக்குது.



# மான்

காட்டில் வாழும் புள்ளிமான்
ஆட்டைப் போலே உள்ளது
கூட்ட மாக வாழுது
கொடியைச் செடியை மேயுது.

இலையே இல்லா கிளையென
இருக்கு மானின் கொம்புகள்
சிலையில் காணும் அழகையே
சிந்தும் மானின் கண்களே!

எந்த வீட்டுக் கோலத்தில்
இந்த மான்கள் புரண்டன?
அந்தக் கோலப் புள்ளிதான்
அழகாய் ஒட்டிக் கொண்டதோ?

ஆட்டைக் கொன்று தின்றிடும்
அருள் இல்லாரைப் போலவே
காட்டு விலங்கும் மான்களை
வேட்டை யாடித் தின்னுதே!

# கோழி



கொண்டை சிவந்த சேவலார்
கூரை ஏறிக் கூவுறார்!
நொண்டிச் சிறகை விரித்துமே
சண்டை நடன மாடுறார்

பெட்டைக் கோழி அருகிலே
பெருமையோடு நிற்கிறார்
எட்டி எட்டி இறக்கையை
தட்டிச் சண்டைக் கழைக்கிறார்!

பஞ்சு மிட்டாய் குஞ்சுகள்
மஞ்சள் பந்தாய்த் தோன்றுது
கொஞ்சிக் கொஞ்சி தாயுடன்
கூட்ட மாக மேயுது.

பருந்தின் நிழலைப் பார்த்ததும்
பதறிக் கோழி அழைக்குது
அருகில் ஓடிக் குஞ்செலாம்
அன்னைச் சிறகுள் பதுங்குது.

குப்பைச் சீய்த்துக் காட்டுது
குஞ்சு கற்றுக் கொள்ளுது
அப்படி இப்படி நகர்ந்திடா(து)
அன்னைக் குஞ்சைக் காக்குது.

# கரடி



கரடிக் கருப்புக் கரடி
கற்றைக் கற்றை யாய்முடி!
விரலின் நகமோ கூரடி
விந்தை இந்த விலங்கடி!

நாலு காலால் நடக்குது
நம்மைப் போலும் நடக்குது
வாலுங் கூட இருக்குது
வாட்ட சாட்ட மானது.

சண்டை நல்லா போடுமாம்
சருக்கும் மரத்தில் ஏறுமாம்
கெண்டை மீனைப் பிடிக்குமாம்
ஒண்டி யாக உண்ணுமாம்!

வித்தைக் காரர் சொற்படி
வேடிக் கைகள் காட்டுது
ஒத்தைச் சக்கர சைக்கிளும்
ஓட்டிச் சுற்றிக் காட்டுது.

# பொம்மை



பொம்மை நல்ல பொம்மை
புரண்டே ஆடும் பொம்மை
அம்மா தந்த பொம்மை
அழகுக் குண்டு பொம்மை!

தொந்தி பெருத்த பொம்மை
தூங்கா திருக்கும் பொம்மை
குந்திக் கிடக்கும் பொம்மை
குண்டு சட்டிப் பொம்மை!

கால்கள் நீட்டா பொம்மை
கண்ணைக் கவரும் பொம்மை
பால்கு டிக்கா பொம்மை
பள்ளிச் செல்லா பொம்மை!

மண்ணால் செய்த பொம்மை
மரத்தால் செய்த பொம்மை
வண்ணப் பூச்சுப் பொம்மை
வட்ட மடிக்கும் பொம்மை!

கூடி ஆட பொம்மை
கொடுக்கும் மகிழ்வு பொம்மை
ஆடிப் பாடக் கேட்டு
அலுத்துக் கொள்ளா பொம்மை!

# மிதி வண்டி



மூன்று சக்கர மிதிவண்டி
  முன்பின் நகரும் மிதிவண்டி
ஊன்றிக் காலால் நிறுத்தாமல்
  ஓட்டிப் பழகும் மிதிவண்டி.

வீட்டைச் சுற்றி ஓட்டிடலாம்
  விழாமல் வித்தைக் காட்டிடலாம்
மாட்டுக் கொம்புப் பிடிபற்றி
  மகிழ்வாய் ஓட்டும் மிதிவண்டி.

அடிக்கப் பிடியில் மணியுண்டு
  அமரும் இருக்கை இரண்டுண்டு
இடிக்கும் முன்னே நிறுத்திவிட
  இரண்டு தடைகள் அதிலுண்டு.

படிப்பில் முதலாய் வந்ததற்குப்
  பரிசாய் வாங்கித் தந்ததிது
படித்தால் பலனே கிடைக்குமெனும்
  பாடம் சொல்லும் மிதிவண்டி.

# தொலைக் காட்சி



வண்ண வண்ணத் தொலைக்காட்சி
வழங்கும் நிறைய படக்காட்சி!
எண்ணப் படிநாம் காண்பதற்கே
ஏற்ற வரிசை அலைக்காட்சி!

சிறுவர் நிகழ்ச்சிக் கண்டிடலாம்
செய்தி படிக்கக் கேட்டிடலாம்
விறுவிறுப் பான தொடர்களையும்
விரும்பி யாரும் பார்த்திடலாம்.

பாட்டைக் கேட்டுச் சுவைத்திடலாம்
பாடம் கேட்டும் பயின்றிடலாம்
நாட்டு நடப்பு அறிந்திடலாம்
நல்லோர் உரையும் கேட்டிடலாம்.

விஞ்ஞா னத்தின் விந்தையிது
வீட்டுள் உலகைக் காட்டுதிது
அஞ்ஞா னத்தை ஓட்டுதிது
அறிவின் துணையாய் ஆனதிது.

# புத்தகம்



நல்ல நல்ல புத்தகம்
நாம் படிக்கும் புத்தகம்
எல்லாம் உள்ள புத்தகம்
எனதே அழகு புத்தகம்

ஆமை முயலும் ஓடுது
அழகு மயிலும் ஆடுது
ஊமை போலே சிங்கமும்
உற்றுப் பார்த்தே முறைக்குது!

பார்க்கக் கிடைத்த புத்தகம்
படிக்கத் தானே புத்தகம்
சேர்க்க வேண்டும் புத்தகம்
சிறுவர்க் கேற்ற புத்தகம்.

பட்டுப் புடவை போலவே
அட்டை நல்லா மினுக்குது
தொட்டுப் பார்க்கச் சொல்லியே
தூண்டி படிக்கப் பண்ணுது!

அக்காள் அண்ணன் புத்தகம்
அம்மாம் பெரிய புத்தகம்
சொக்காய் சட்டை போலவே
சொன்னால் பத்துப் புத்தகம்!

காலை மாலை படிக்கனும்
கணக்கைச் செய்து முடிக்கணும்
வேலை முடித்து அன்னையும்
விரும்பிச் சொல்லிக் கொடுக்கணும்.



# பேனா (தூவல்)



ஊற்றுப் பேனா என்றன் பேர்
உங்கள் பைதான் என் வீடு!
மாற்றுப் பெயரும் எனக் குண்டு
மதிக்கும் பொருளில் நான் ஒன்று.

கழுத்தும் நாக்கும் எனக்குண்டு
காணப் பற்கள் அதிலுண்டு
இழுத்து மூடும் கதவைப்போல்
என்னை மூட உறையுண்டு.

நீட்டுக் கழுத்து ஒட்டகந்தான்
நீரை உறிஞ்சிக் கொள்வதுபோல்
போட்டுக் கொள்வேன் மையைநான்
புரண்டு தாளில் எழுத்தாவேன்.

அழுக்கு மையைப் போட்டாலோ
அடைத்துக் கொள்ளும் என்நெஞ்சு
எழுத்து அழகாய் இருக்காது
எனக்கு அசுத்தம் பிடிக்காது.

# மணிப்பொறி




வண்ண வண்ண மணிப்பொறி
வட்ட சதுர மணிப்பொறி!
கண்ணைக் கவரும் உருவிலும்
காட்சி யாகும் மணிப்பொறி!

இதயம் போலே துடிக்குது
எழுப்ப மணியும் அடிக்குது
உதவி என்றே கைநீட்டி
ஓடி நேரம் காட்டுது

அழகு கொஞ்சும் மணிப்பொறி
அணிய நல்ல மணிப்பொறி
பழகும் வீட்டின் சுவரிலே
பாங்காய்த் தொங்கும் மணிப்பொறி!

கையில் கட்டிக் கொள்ளலாம்
காரில் பொருத்திப் பார்க்கலாம்
பையில் வைத்துக் கொள்ளலாம்
படிக்கும் மிசையில் வைக்கலாம்.

மிசை = மேசை

# மின் விசிறி



மூன்று இறக்கை இருக்கும் - விசிறி
 மூச்சு வாங்கப் பறக்கும்
ஊன்றி வைத்த இடத்தில் - உயரே
 ஊக்கில் தொங்கிக் கிடக்கும்.

காற்று வாங்கிக் கொடுக்கும் - நமது
 கைக்கு எட்டா திருக்கும்
ஏற்றி வைத்த இடத்தில் - நின்றே
 இயங்கக் காற்று பிறக்கும்

மின்னால் தானே சுற்றும் - இன்றேல்
 மிடுக்கு முற்றும் வற்றும்
பொன்னை உருக்கும் கோடை - வந்தால்
 புழுக்கம் போக்கிச் சிறக்கும்.

வெற்றுத் தரையில் நிற்கும்
 ஒற்றைக் காலு விசிறி
சுற்றும் முற்றும் பார்த்தே
 சுழலும் மேசை விசிறி.



# காரு நல்ல காரு!

ஆமை உருவில் காரு
அதில்நாம் போவோம் ஊரு!
ஊமை போலே தெரியும்
உறுமிப் பாய்ந்தால் புரியும்!

இரண்டு வட்டக் கண்கள்
இருக்கும் பதிவு எண்கள்!
மிரண்டு பக்கம் ஒதுங்கும்
வீடு வந்தால் பதுங்கும்!

முன்னால் தண்ணீர் குடிக்கும்
பின்னால் எண்ணெய் பிடிக்கும்
கண்ணாம் விளக்கை எரிக்க
கருமின் பேழை இருக்கும்!

வண்ண வண்ணக் காரு
வாங்கி ஓட்டிப் பாரு!
அண்ணன் தங்கை யோடு
அமர்ந்து கூடிப் பாடு!

காரில் சென்றால் பெருமைதான்
காலம் மிச்சம் அருமைதான்;
தேரில் சாமி ஊர்வலம்;
தெருவில் எங்கள் கார்வலம்!

கருமின்பேழை - பேட்டரி



# கணிப்பொறி

என்ன விந்தை என்ன விந்தை
சின்னத் திரையிலே
சொன்ன தெல்லாம் செய்யும் போது
ஒன்றும் புரியலே!

எழுத்து வேலை எதைத்தந் தாலும்
எளிதில் செய்யுது
இழுத்துக் கோடு போட்டுக் கட்டம்
எழிலாய் வரையுது.

மின்னல் வேக மாகக் காட்சி
மாற்றிக் காட்டுது
ஒன்றைத் தந்து பலது கேட்டால்
உடனே கொடுக்குது.

சுட்டிப் பெட்டித் தொடர்பி னாலே
சுருக்காய் நடக்குது
பெட்டிக் கலையைக் கற்றுக் கொள்ள
மனசு துடிக்குது.

கணினி என்னும் வித்தை தன்னைக்
கற்றுக் கொள்ளுவோம்
பணியின் நேரம் பாதி யாக்கி
மகிழ்வில் துள்ளுவோம்!

சுட்டி = மௌஸ்



# கப்பல்

கப்பல் பெரிய கப்பல்
கடலில் மிதக்கும் கப்பல்
அப்பா அம்மா காட்ட
அன்று பார்த்த கப்பல்.

மூட்டை முடிச்சு ஏற்றி
முதுகு வளைந்த கப்பல்
பாட்டை இல்லாக் கடலில்
பாய்ந்து போகும் கப்பல்.

பாட்டு தந்த பாரதி
காட்டும் மீசை போலவே
நீட்டுக் கப்பல் தோணுது
நீரின் மேலே தூங்குது.

சாய்ந்தே ஆடும் கப்பல்
சண்டை போடும் கப்பல்
ஓய்ந்து நிற்கும் போதே
உற்றுப் பார்த்து மகிழ்வோம்!

# படம் எடுக்கும் கருவி

(கேமரா)



படம் எடுக்கும் பெட்டி - இது
பார்க்க சின்னப் பெட்டி
குடலைப் போலே உள்ளே - சுருள்
குடியி ருக்கும் பெட்டி.

ஒற்றைக் கண்ணு பெட்டி - இது
ஒளியை உண்ணும் பெட்டி
தொற்றித் தோளில் தொங்கி - ஊரைச்
சுற்று மிந்தப் பெட்டி

மின்னல் போன்றே வெளிச்சம் - தட்ட
மேனி தொட்டுச் செல்லும்
உன்றன் என்றன் உருவை - பெட்டி
உள்ளி ழுத்துக் கொள்ளும்.

கருப்புச் சுருளில் பதியும் - பின்னர்
காண அழகாய்த் தெரியும்
இருப்புக் கொள்ள மாட்டோம் - படம்
எடுத்தால் பார்க்கும் மட்டும்.



# குடை

என்றன் குடையைப் பாருங்க
எத்தனை நிறம் கூறுங்க?
சின்னக் குடையிி தானுங்க
சிறப்புச் சிங்கப் பூருங்க!

கம்பி முனையைப் பாருங்க
கருப்பு மணிகள் மின்னுங்க
தம்பி கூட வந்தால்தான்
தலையில் தண்ணீர் சொட்டுங்க!

மஞ்சள் வண்ண வெய்யிலை
மறைத்துக் கொள்ளும் பாருங்க
கொஞ்ச மான மழையிலே
குடையும் நம்மைக் காக்குங்க!

தாத்தா குடைதான் கருப்புங்க
தாயார் குடையில் பூவுங்க!
வாத்தி யாரு குடைகளோ
வண்ணம் வேறு பாருங்க!

சூரைக் காற்று வீசினால்
சுருக்கக் குடையைத் தவறினால்
கூரை வீட்டைப் போலவே
குடையும் பிய்ந்து போகுங்க!

# தொலை பேசி



கயிறு போன்ற கம்பிதான்
கம்பம் ஏறி வந்துமே
வயிறு மேலே குந்தியே
வாங்கிப் பேசக் கொடுக்குது.

முரட்டுக் காளை நெற்றிநேர்
முண்ட முகத்தில் எண்களே!
இரட்டைச் சுழி கொம்பென
இருக்கு பேச்சு வாங்கியே!

மாம்ப லத்து மாமாவும்
மைலாப் பூரு அத்தையும்
ஆமாம் போட்டுப் பேசிட
அழைக்கும் தொலை பேசியே!

அமெரிக் காவில் இருப்பவர்
அப்படியே பேசலாம்
இமைக்கும் நேர தாமதம்
இன்றிச் செய்தி கூறலாம்.

அறிவால் கண்ட தொலைபேசி
அளித்தார் பெயரை நீயோசி
குறியாய்க் கற்றே உன்றன்பேர்
கூற ஒன்றைக் கண்டுபிடி.

# மெழுகுவர்த்தி



வாழைத் தண்டைப் போலே
வழ வழப்பாய் இருக்குது
ஏழை வீட்டு விளக்கென
எரிந்து வெளிச்சம் கொடுக்குது.

மின் தடங்கல் ஆனதும்
மிரட்டும் இருட்டு வந்ததும்
தன்னை உருக்கி வெளிச்சமாய்
தருது மெழுகு வத்தியே!

வெடிக்கும் பட்டா(சு) உருவிலே
வெள்ளை சிவப்பு மஞ்சளாய்
தடித்த சிறுத்த அளவிலும்
கிடைக்கும் மெழுகு வத்தியே!

மாதா கோவில் பூசையில்
மதிக்கும் மெழுகு வத்தியே
ஆதா ரம்போல் ஒளிருது
அழகாய் நின்று எரியுது.

பிறந்த நாளில் கேக்கிலே
பிஞ்சு வத்தி எரியுது
சிறந்த நாளில் அணைப்பதன்
சிறப்பு என்ன கூறுவீர்?

# மேளம்



என்ன தப்பு செய்தது?
  எதை உடைத்துப் போட்டது?
அன்னை இல்லாப் பிள்ளையா?
  ஐயோ அடித்து நொறுக்குறார்!

ஒன்றும் தப்பே செய்யலே
  ஓடித் தாண்டிக் குதிக்கலே
சொன்ன பேச்சை மீறினால்
  சொல்லித் திருத்தக் கூடுமே!

கத்திச் சத்தம் போடவா
  கழியைக் கொண்டு அடிக்கிறார்?
சத்தம் போட்டு அழுவதை
  சுற்றி நின்று கேட்கிறார்!

கூட்டம் கூடும் இடத்திலேன்
  கொண்டு வந்து அடிக்கிறார்?
நீட்டு பீப்பீ பக்கமாய்
  நின்று அழுது வடிகிறார்!

அடியை மேளம் வாங்குது
  அடிப்ப வர்க்கேன் வியர்க்குது?
இடித்து மழையும் பெய்யுதோ?
  இன்றைக் கிவையும் தேவைதான்.



# எண்ணி எண்ணி . . .

ஒன்றே ஒன்று என்ன?
ஒளிதரும் கதிரோன் ஒன்றே.

இரண்டே இரண்டு என்ன?
ஈன்றதாய் தந்தை இரண்டு.

மூன்றே மூன்று என்ன?
முத்தமிழ்க் கலைகள் மூன்று.

நான்கே நான்கு என்ன?
நல்லியல் பண்புகள் நான்கு.

ஐந்தே ஐந்து என்ன?
அறியும் புலன்கள் ஐந்து.

ஆறே ஆறு என்ன?
அறிவின் பிரிவு ஆறு.

ஏழே ஏழு என்ன?
எண்ணும் கிழமைகள் ஏழு!

எட்டே எட்டு என்ன?
ஏற்கும் திக்கே எட்டு.

ஒன்பதே ஒன்பது என்ன?
உயர்ந்த மணிகள் ஒன்பது.

# கோமாளி



முட்டை மூக்கு வித்தைக் காரர்
முட்டிக் கரணம் போடுறார்
நெட்டைக் காலால் நடந்து காட்டி
நெளிந்து நெளிந்தும் ஓடுறார்.

சேட்டை எல்லாம் செய்து நம்மை
சிரிக்க வைக்க ஆடுறார்
ஓட்டை வளையம் உள்நுழைந்து
உடைகள் அவிழ ஓடுகிறார்.

கம்பி மேலே நடந்து காட்டி
கால் வழுக்கி விழுகிறார்
எம்பி ஊஞ்சல் ஆடும் போது
இரண்டு கையால் தொழுகிறார்.

மட்டை யாலே மற்ற பேரைத்
தட்டி விட்டு ஓடுறார்
குட்டை யான ஆளைத் தள்ளி
குதிரைப் போலே தாண்டுறார்.

சிரிக்க வைக்கும் இவரு செய்யும்
சேட்டை ரொம்ப ஜோரு
விரித்த வலையில் விழுந்தெ ழுந்தே
விரைந்து ஓடு றாரு.

# ஊர்வலம்



எம்மாம் பெரிய ஊர்வலம்!
எதற்காம் இந்த ஊர்வலம்?
சும்மா வீட்டில் இல்லாமல்
சுற்றி வரவா ஊர்வலம்?

வாக னங்கள் போகவே
வழிம றித்து நடக்குது
போகப் போக நீளுது
பொழுது சாய முடியுது.

கூச்சல் போட்டுப் போகுது
குறைகள் சொல்லிப் போகுது
ஏச்சுப் பேச்சு இரைச்சலால்
என்ன செய்யப் போகுது?

கல்லெ றிந்து உடைக்குது
கடையை மூடச் செய்யுது
நல்ல செயலுக் காகவா
நடக்கு திந்த ஊர்வலம்?

# எங்கிருந்து



அன்னை மூலம்
  பெற்று வந்தேன் அன்பை
அன்புத் தந்தை
  ஊட்டி விட்டார் அறிவை
அறிவு ஆசான்
  சொல்லித் தந்தார் ஒழுக்கம்
ஒழுக்கம் பேணும்
  அக்காள் சொன்னாள் பாட்டு
பாட்டுப் பாடி
  அண்ணன் தந்தான் மிட்டாய்
மிட்டாய் கேட்டுத்
  தம்பி வந்தான் சுருக்காய்
சுருக்காய்ப் பள்ளிச்
  செல்ல வேண்டும் தெரியுதா?
தெரிந்து கொள்ளப்
  படிக்க வேண்டும் புரியுதா?
புரிந்து கொண்டே
  பேச வேண்டும் எங்குமே
எங்கும் திறமை
  காட்டப் புகழ் தங்குமே!

# கிரிக்கெட்



அடித்தால் ஆட்டம் பிடித்தால் போகும்
அதுதான் கிரிக்கெட் ஆட்டம் - காண
அடடா என்ன கூட்டம்!
இடியாய் மட்டை அடியை வாங்கி
எகிறிப் பறக்கும் பந்து - பிடியை
இழந்தால் போவார் நொந்து!

மாமன் நெற்றி நாமம் போலே
மழம முப்புத் தண்டு - மேலே
இருக்கும் ரெண்டு சிண்டு!
ஆம தற்குக் காவல் காக்க
ஆளி ருப்பார் நின்று - கையில்
உறை அணிந்து கொண்டு.

அடித்த பந்து உருண்டு எல்லை
அடைந்தால் ஓட்டம் நான்கு - பந்து
பறந்து போனால் ஆறு!
அடிக்கத் தவறி தண்டில் பட்டால்
ஆட்டம் போகும் பாரு - உடன்
ஐயா திரும்பு வாரு.

அடிக்கும் அணியில் இருவர் மட்டை
ஆள களத்தில் இருப்பார் - அவர்
ஆடி ஓட்டம் எடுப்பார்
பிடிக்கும் அணியில் பத்து மேலும்
பக்கம் ஒருவர் இருப்பார் - பந்தைப்
பாய்ந்து தடுத்துக் கொடுப்பார்.

கிட்டிப் புள்ளு ஆட்டம் முற்றிக்
கிளைத்த திந்த கிரிக்கெட் - தொ.கா. *
வளர்த்த திந்த கிரிக்கெட்
பட்டி தொட்டி மக்கள் எல்லாம்
பார்க்கு தின்று கிரிக்கெட் - பணம்
சேர்க்கு திந்த கிரிக்கெட்.

* தொ.கா. = தொலைக் காட்சி.



# முறுக்கு

முறுக்குப் பாரு முறுக்குப் பாரு
மொற மொறக்கும் முறுக்கு பாரு
நொறுக்கி டாமல் எடுத்துப் பாரு
நொறுங்க மென்று சுவைத்துப் பாரு!

சின்ன முறுக்கு பெரிய முறுக்கு
சீடை முறுக்கு மணக்கும் பாரு
சொன்ன உடனே எச்சில் ஊறும்
சுவைத்துப் பார்த்து பிறர்க்குக் கூறு!

அரிசி மாவு கடலை மாவு
அறைத்துச் செய்த முறுக்கு பாரு
சிரித்து நெய்யில் புரண்டு வெந்து
சிவக்க எடுத்த முறுக்கு பாரு!

எண்ணெய் மேலே போட்ட கோலம்
எடுத்து வைக்க வருது பாரு
எண்ணிச் சீராய் அடுக்கு உள்ளே
எடுத்து அடுக்கி வைத்துப் பாரு!

பத்து நாட்கள் வைத்தி ருந்தும்
பகிர்ந்து கூடி உண்டு பாரு
சத்தம் போடும் மெல்லும் போது
சமர்த்தாய்க் கிண்டல் பண்ணிப் பாரு!

# தெரு வணிகர்



கூவிக் கூவி விற்கிறார்
  கூடை சுமந்து விற்கிறார்
தாவித் தாவி நடக்கிறார்
  தண்டு கீரை விற்கிறார்!

சமைக்க வேண்டும் காய்கறி
  சத்து மிக்கக் காய்கறி
சுமையை வண்டி ஏற்றியே
  சொல்லித் தெருவில் விற்கிறார்?

மோரு தயிரு விற்கிறார்
  மூடித் தண்ணீர் விற்கிறார்
தேரு போன்ற வண்டியில்
  தெருவில் சாமான் விற்கிறார்.

தள்ளு வண்டி நிறையவே
  தளத ளக்கும் பழங்களை
அள்ளி வந்து நம்மையே
  அழைத்துப் பேசி விற்கிறார்!

ஏழை வணிகர் பிழைப்பிலே
  ஏற்றங் காண உழைப்பிலே
வாழை போன்று வளரவே
  வாழ்த்தி வாங்கு நிறையவே!

# கதையாம் கதையாம்



ஆப்பசைத்த குரங்குகதை
அக்காள் சொன்னாள் - அதையும்
அழகாய்ச் சொன்னாள்
ஆப்பம்தின்று ஏப்பம்விட்ட
ஏய்ப்பையும் சொன்னாள் - பூனை
ஏமார்ந்ததைச் சொன்னாள்

எருதுநான்கு கெட்டகதை
எடுத்துச் சொன்னான் - அண்ணன்
தொடுத்துச் சொன்னான்
ஒருமைவிட்டுச் சண்டையிட்டு
ஒழிந்ததைச் சொன்னான் - சிங்கம்
உண்டதைச் சொன்னான்.

அண்ணலெனும் காந்திகதை
அம்மாள் சொன்னாள் - அவரின்
அருமையைச் சொன்னாள்
உண்ணாநோன்பு வெற்றிதந்த
உண்மையைச் சொன்னாள் - விளைந்த
நன்மையைச் சொன்னாள்.

மூன்றுமன்னர் ஆண்டகதை
முழுவதும் சொன்னார் - அப்பா
முடிவையும் சொன்னார்
மூன்றுபேரும் நீதிகாத்த
முறைகளைச் சொன்னார் - நீதி
நிறைகளைச் சொன்னார்.

பாண்டவர்கள் பாரதத்தைப்
பாட்டியே சொன்னாள் - கதையை
நீட்டியே சொன்னாள்
தூண்டிவிட்ட சகுனிதந்த
தொல்லையைச் சொன்னாள் - பகையின்
எல்லையைச் சொன்னாள்.

தமிழ்வளர்த்தோர் தம்மைப்பற்றி
தாத்தா சொன்னார் - தமிழ்த்
தாத்தாவைச் சொன்னார்
தமிழ்ப்படிப்பைத் தவிர்க்கவரும்
தாழ்வினைச் சொன்னார் - தமிழை
வாழ்த்திடச் சொன்னார்.

# பாடம் கற்பித்த பசு



பையன்: குரங்கண்ணே குரங்கண்ணே
எங்கே போறிங்க?

குரங்கு : கொய்யா மரத்தில் ஏறி ஆடிக்
குதிக்கப் போறேனே!

பையன்: காளை அண்ணே! காளை அண்ணே!
எங்கே போறிங்க?

காளை : காட்டுக் குள்ளே வளர்ந்த புல்லை
மேயப் போறேனே!

பையன்: எருமை அண்ணே! எருமை அண்ணே!
எங்கே போறிங்க?

எருமை: ஏரிக் குள்ளே இறங்கி நல்லா
குளிக்கப் போறேனே!

பையன்: காக்கை யண்ணே! காக்கை யண்ணே!
எங்கே போறிங்க?

காக்கை: காட்டுச் சுள்ளிப் பொறுக்கிக் கூடு
கட்டப் போறேனே!

பையன்: சிட்டுக் குருவி! சிட்டுக் குருவி
எங்கே போறிங்க?
சிட்டு : சிந்திக் கிடக்கும் நெல்லைப் பொறுக்கித்
தின்னப் போறேனே!

பையன்: எறும்பு தம்பி! எறும்பு தம்பி!
எங்கே போறிங்க?
எறும்பு : இனிப்பு இருக்கும் இடத்தைத் தேடி
எடுக்கப் போறேனே!

பையன்: பசுவக்கா! பசுவக்கா!
எங்கே போறிங்க?
பசு : பள்ளிச் செல்லாப் பையனை நான்
முட்டப் போறேனே!

பையன்: பள்ளி நாடி ஓடிப் போறேன்
பசுவே விட்டுடு!
வெள்ளி மாலை திரும்ப வாரேன்
வெண்ணெய் பால் கொடு!



# நல்ல வீடு . ?

( தேர்வு முடிந்து பள்ளி கோடை விடுமுறை விட்ட போது, மாணவிகள் ஒருவரை ஒருவர் தங்கள் வீட்டிற்கு வருமாறு அழைக்கின்றனர். அப்படி ஒரு மாணவி தன் தோழிகளை அழைக்கும் பாடல் இது. அழைப்பவள் பெயர் தாமரை. அழைக்கப்படும் தோழியரில் ஒருத்தி பெயர் முல்லை. )



தாமரை : என்ற னோடு வாருங்கள்
எங்கள் வீட்டைப் பாருங்கள்!

முல்லை : என்ன உண்டும் வீட்டிலே
எனக்குக் கூறு பாட்டிலே?

தாமரை : வண்ணப் பூக்கள் செடியுண்டு
வழவ ழுப்பாய் தரையுண்டு
கண்ணைக் கவரும் இருக்கைகள்
காட்சிப் பொருளும் அங்குண்டு.

முல்லை : இன்னும் என்ன அங்குண்டு?
எடுத்துச் சொன்னால் பயனுண்டு.

தாமரை : சன்னல் எல்லாம் கண்ணாடி
சரம்போல் திரைகள் முன்னாடி!
மின்னும் வண்ண விளக்குண்டு
மிகவும் பெரிய படமுண்டு!

முல்லை : என்ன என்ன அறையுண்டு?
எங்கும் வீட்டில் குறையுண்டு.

தாமரை : சின்னக் குறையும் இல்லாத
சிறந்த வீடே எம்வீடு!

படுக்க ரெண்டு அறையுண்டு
பண்டம் வைக்க அறையுண்டு
அடுப்புக் கென்றும் அறையுண்டு
அமர்ந்தே உண்ண அறையுண்டு.

முல்லை : ஒப்ப னைக்கும் அறையுண்டா?
ஒன்றுக்(கும்) இரண்டுக்(கும்) அறையுண்டா?

தாமரை : அப்படிக் கேளு சொல்கின்றேன்
அழகாய் அதற்கும் அறையுண்டு
ஒன்றுக் கிரண்டிற் கெல்லாமே
உள்ளே வெளியே அறையுண்டு.

முல்லை : நன்று இதற்கும் மேலாக
நல்ல அறைகள் உண்டோசொல்?

தாமரை : பூசை அறையும் ஒன்றுண்டு
பொழுதும் எரியும் விளக்குண்டு.

முல்லை : ஓசை யின்றிப் படிப்பதற்கே
உண்டோ அறையும் நூல்கொண்டு?

தாமரை : எங்கள் வீட்டில் அது இல்லை
எடுத்துப் படிக்க நூலில்லை!

முல்லை : படித்தோர் வாழும் வீடென்றால்
படிக்க நூலறை வேண்டாமோ?
படிப்பறை இல்லா வீடெல்லாம்
பார்வை இல்லாக் கூடன்றோ?

தாமரை : அப்பா விடம்நான் சொல்கின்றேன்
அழகாய் நூலறை செய்கின்றேன்
இப்போ நீங்கள் வரவேண்டாம்
ஒப்பாய் முடித்துச் சொல்கின்றேன்.



# பொறுமையின் பெருமை.?



எங்கள் ஊரில் திருவிழா
தங்கிப் பார்க்க அழைத்ததால்
அத்தை மாமா பிள்ளைகள்
சித்தி யோடே வந்தனர்.

வீட்டில் எல்லாம் கூட்டமே
ஆட்டம் பாட்டு எங்குமே!
புதிய கடைகள் வந்தன
புதிய பொருளும் வந்தன!

சுற்றும் ராட்டினத் துடன்
ஒற்றைப் பெரிய சக்கரம்
வண்ணப் பொம்மை, வளையலும்
உண்ணும் பண்டக் கடைகளும்
வந்து வீதி குவிந்திட
தொந்தி பெருத்த யானையும்
கோயி லுக்கு வந்தபின்
வாயி லுக்கும் வந்தது!

தும்பிக் கையை நீட்டியே
நம்மைத் துட்டும் கேட்டது.
தெருவில் சுற்றும் நாயெலாம்
உருவம் பெருத்த யானையைப்

பார்த்துப் பயந்து குரைத்தன
பார்த்துப் பதுங்கிக் குரைத்தன!
குரைக்கும் நாய்க்கு விலகியே
விரைந்து யானை நடந்தது.

உயர்ந்த யானை பொறுமையை
பயந்த தாக நினைத்தன!
அடுத்து யானை நிழலிலே
படுத்து ஓய்வு எடுத்தது.

தெருநாய் எல்லாம் திரண்டன
அருகில் வந்து குரைத்தன!
மலைபோல் படுத்த யானையோ
சிலைபோல் பேசா திருந்தது.

பருத்த யானை முதுகிலே
துடுக்குக் காக்கை அமர்ந்தது
மெதுவாய் அலகைத் தீட்டியே
முதுகைச் சொறிந்து விட்டது.

"காக்கை கூட யானையை
முக்கை விட்டுத் தோண்டுது
துரத்தப் பயந்து யானையோ
மரத்தைப் போலே கிடக்குது!"

என்று எண்ணி நாய்களில்
ஒன்று சீண்ட
நினைத்தது.
வேண்டா மென்று கிழட்டுநாய்
வேண்டிக் கேட்டுக் கொண்டது.

"அஞ்சு கின்ற கிழங்களே!
கொஞ்சம் விலகிப் போங்களே!
இந்த யானை வாலைநான்
முந்திக் கடித்துக் காட்டுவேன்."

என்று கூறி ஓடியே
நின்று வாலைக் கடித்தது
பொறுமை காத்த யானையோ
சிறுமை கண்டு சினந்தது
கெட்ட நாயைப் பற்றியே
எட்டத் தூக்கி எறிந்தது

தொப்பென் றந்த நாயுமே
அப்பால் விழுந்து செத்தது'

அடக்க மான யாரையும்
இடக்காய் எண்ணிச் சீண்டினால்
தண்டனையோ கடுமையாய்
உண்டு பாடம் அறிகவே!



# கறையான் புற்று



அடர்ந்த காட்டுக் குள்ளே
ஆல மரத்தின் கீழே
படர்ந்த புதரின் பக்கம்
பட்ட மரத்தைக் கண்டு
தொடர்ந்து உண்டு வாழ
தோது என்றே எண்ணி
கடலை மூக்கு போன்ற
கறையான் நின்ற தங்கே!

கூட்டம் கூட்ட மாக
கூடிக் கறையான் எல்லாம்
ஓட்டம் நடையு மாக
உழைத்து எச்சில் மண்ணால்
கோட்டை போலே புற்றைக்
குடைந்து கட்டிக் கொண்டு
காட்டில் மறைந்தே வாழக்
கற்றுக் கொண்ட தென்னே!

மக்கும் மரத்தைத் தின்றும்
மரத்தின் சருகை உண்டும்
தக்க பாது காப்பாய்த்
தன்னை மறைத்துக் கொண்டும்
அக்கம் பக்கம் போக
ஆழப் பாதைத் தோண்டி
மக்கள் பார்க்கா வண்ணம்
மறைந்து கொள்ளும் செல்கள்.

புலிகள் வாழும் காட்டில்
பூக்கள் மணக்கும் காட்டில்
எலிகள் வாழ மட்டில்
இடமா இன்றிப் போகும்?
எலியை விழுங்கும் பாம்பு
இரைக்குத் துரத்தும் போது
பலிநாம் இன்று என்றே
பதறிப் புற்றுள் போச்சே!

புற்றுள் எலியைத் தேடிப்
போன பாம்பு அந்தப்
புற்றே தனதாய் ஆனால்
போதும் வாழ என்றே
சற்றே நினைத்துப் பார்த்து
சரிநம் முடிவே என்று
புற்றுள் தங்கிக் கொண்டு
புரண்ட தந்த பாம்பே!

நன்றே செய்ய எண்ணார்
  நன்றி நெஞ்சில் இல்லார்
இன்று ஏழை வீட்டை
  ஏய்த்தே பறித்தல் போலே
கொன்று போடும் நஞ்சைக்
  கொண்ட பாம்பும் ஆச்சு
நன்றாய் சிலநாள் போச்சு
  நாகம் மகிழ லாச்சு!

புற்றின் மேலோர் கொம்பில்
  பூந்தேன் கூட்டைக் கண்டு
கற்றை முடியைக் கொண்ட
  கரடி ஆவல் கொண்டு
பற்றி மரத்தில் ஏறி
  பறிக்கும் போது கூடு
புற்றுள் வழுக்கி வீழ்ந்தே
  போகப் பதற லாச்சு.

"எட்டிப் பறிக்கும் போது
  இழுந்த தாலே சோர்ந்து
விட்டா நானும் போவேன்?
  வீணில் நொந்தா சாவேன்?
குட்டிக் காகத் தானே
  கொம்புத் தேனைப் பார்த்தேன்
கொட்டுந் தேனிக் கூட்டை
  குடைந்தெ டுப்பேன்" என்றே

கரடி மரத்தை விட்டே
கடுகி இறங்கி வந்தே
விரலின் நகத்தை நீட்டி
விட்டுப் புற்றுள் தேடி
அரவை அடையாய் எண்ணி
அழுத்திப் பற்றிப் புற்றில்
உரசி இழுக்கப் பாம்பின்
உடலில் காயம் அந்தோ!

"பிடித்தது பாம்பா?" என்றே
பெருஞ்சினம் கொண்டு ஓங்கி
அடித்தது தரையில் பாம்பு
அப்பவே இறந்து போச்சு
தடித்தனம் செய்தே மாற்றார்
தம்பொருள் கவர்வார்க் கெல்லாம்
முடிவிதே! பாடம் கற்று
மூளையில் பதிய வைப்போம்.



# கல்விச் செல்வம்



தந்தை: என்னைப் போலே வளர்ந்த பின்னர்
என்ன செய்வாய் சொல்லு? - நீயும்
ஏது செய்வாய் சொல்லு?

மகன்: அன்னை தந்தை சொன்ன முறையில்
என்னை உயர்த்திக் கொள்வேன் - நன்மை
இருக்கும் இடமே செல்வேன்.

தந்தை: படித்து முடித்த பின்னர் நீயும்
பார்ப்ப தென்ன வேலை? - பொருள்
சேர்க்க என்ன வேலை?

மகன்: படிப்பு சொல்லிக் கொடுக்கும் வேலை
பார்க்க எனக்கு ஆசை! - எதிர்
பார்க்க மாட்டேன் காசை!

தந்தை: படிப்பு சொல்லிக் கொடுக்கும் வேலை
பார்க்க ரொம்ப தொல்லை - அதிகம்
பணத்தைக் கொடுப்ப தில்லை.

மகன்: படிப்பைப் போன்ற செல்வம் வேறு
பாரில் இல்லை என்றீர் - இன்று
பழித்துப் பேசு கின்றீர்!

தந்தை: பணத்தைக் கொட்டிப் படிப்ப தெல்லாம்
பதவி பிடிக்கத் தானே - பணம்
பார்த்துச் சேர்க்கத் தானே ?

மகன்: பணத்துக் காக படித்த துண்டா
பழைய கால தாத்தா ? - சொத்தைப்
பதவி யாலா சேர்த்தார் ?

தந்தை: நிலத்தை உழுது பாடு பட்டே
நிறை சொத்து சேர்த்தார் - குடும்ப
நலனை எல்லாம் காத்தார்.

மகன்: நலத்தின் வித்து கல்வி பண்பை
நாளும் வளர்க்கத் தானே ?-யார்க்கும்
நன்மை செய்யத் தானே ?

தந்தை: கொடுக்க வேண்டும் எல்லா ருக்கும்
கோடி செல்வம் உண்டா ? - வாரி
கொடுக்கக் குவித்த துண்டா ?

மகன்: எடுக்க முடியாக் கல்விச் செல்வம்
எனக்குக் கிடைத்தால் போதும்-அதற்கு
இல்லை ஈடு ஏதும் !